Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம்௵ நவம்பர்மீ 14௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 35

## இந்திய சிப்பாய்களின் போர்த் திறமை

### ஜெனரல் வேவலின் பாராட்டு

### "புலி தாக்குகிறது" என்ற புதிய புத்தகம்

[வடக்கு ஆப்பிரிக்காவிலும், சிரியா, இராக், இரான் முதலிய நாடுகளிலும், இந்திய சிப்பாய்கள் திறமையாகப் போர்புரிந்தார்கள். அவர்களுடைய திறமையைப் பாராட்டி, இந்தியாவின் பிரதம தளகர்த்தர், ஜெனரல் சர் ஆர்ச்சிபால்டு வேவல், "கவுன்சில் ஆப் ஸ்டேட்" என்ற இந்திய மேல் சட்டசபையில் சென்ற வாரம், பல விவரங்களைத் தெரியப்படுத்தியிருக்கிறார். அவர் கூறியதன் சாராம்சம் கீழே தரப்படுகிறது :—]

"மத்திய கிழக்குப் பகுதியில், நான் பிரதம தளகர்த்தராக இரண்டு வருஷங்கள் இருந்தேன். இந்தியாவிலிருந்து வந்த பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் செய்த திறமையான வேலையை நான் நேரிலிருந்து பார்த்தேன். எகிப்தில் உள்ள மேற்குப் பாலைவனத்தில் படையெடுத்துவந்த இத்தாலிய தளகர்த்தர், மார்ஷல் கிரேசியானியின் துருப்புகளை நாசமாக்கியது இந்தியாவிலிருந்து வந்த துருப்புகள்தான்; இத்தாலிய கிழக்காப்பிரிக்க ஏகாதிபத்தியத்தை அழித்ததும் இந்தியத் துருப்புகள்தான்.

"மேற்குப் பாலைவனத்திலும், சூடான், எரீட்ரியா பிரதேசங்களிலும் இந்தியத் துருப்புகள் செய்த சிறந்த வேலையைப்பற்றி எனக்கு முன்னிருந்த இந்திய பிரதம தளகர்த்தர் விவரித்துக் கூறியிருக்கிறார். அப்போது கேரன் என்ற மலைக் கோட்டை பிடிக்கப்படவில்லை. எரீட்ரியாவிலிருந்த இத்தாலியத் துருப்புகளெல்லாம், கேரனைப் பாதுகாப்பதற்காகவும், தலை நகரமான அஸ்மாராவை நோக்கி இந்தியப் பட்டாளங்கள் செல்வதைத் தடுப்பதற்காகவும், துறைமுகமாகிய மாசாவைப் பாதுகாப்பதற்காகவும், சேரிக்கப்பட்டிருந்தன. கேரன் மலைக்கோட்டையை இந்தியத் துருப்புகள் பிடிக்கமுடியாது என்று இத்தாலியர்கள் நினைத்தார்கள். நானும் அப்படியே நினைத்தேன். நாங்கள் மூன்றுதடவை கேரனைத்தாக்கினோம். மார்ச் மாதம் 27-ந்தேதி மூன்றாவது தடவை தாக்குதலில் மூன்றுவார சண்டைக்குப்பிறகு வெற்றிபெற்றோம். இந்த சண்டையில் காட்டப்பட்ட தைரியமும், மனஉறுதியும் இந்தியப்பட்டாளத்தின் சரித்திரத்தில் ஒரு பெருமையான அத்தியாயமாகும். கேரனைப்பிடித்ததும், எரீட்ரியாவில் உள்ள இத்தாலிய பட்டாளத்தின் எதிர்ப்பு முறிந்து போய்விட்டது. 5-வது இந்தியப்பட்டாளம் எதிரிகளை துரத்திச்சென்று, விரட்டியடித்தது. அதன் பயனாக, அஸ்மாரா சரணாகதியடைந்தது. மசாவா துறைமுகம் அடுத்தபடியாகப் பிடிக்கப்பட்டது. பிறகு எரீட்ரியா முழுவதும் பிரிட்டிஷார் கைவசமாய்விட்டது.

### அம்பா அளகியின் வீழ்ச்சி.

"5-வது இந்தியப்பட்டாளம் எதிரிகளை 200 மைல் தூரம் துரத்திக்கொண்டுபோய், அபிசீனியாவில் பிரவேசித்து, கடைசியாக அம்பா அளகியைக் கைப்பற்றிக்கொண்டது. இத்தாலிய கிழக்கு ஆப்பிரிக்காவின் வைஸ்ராயாய் இருந்த அயோஸ்டாபிரபு, 5-வது இந்தியப்பட்டாளத்தின் தளகர்த்தரிடம் சரணமடைந்தார். அம்பா அளகியின் வீழ்ச்சிக்குபிறகு கிழக்கு ஆப்பிரிக்காவில் இத்தாலியர்களின் எதிர்ப்பு நின்று போய்விட்டது. 4-வது, 5-வது இந்தியப்பட்டாளங்கள் எரீட்ரியாவையும், அபிசீனியாவின் வடக்கு பாகத்தையும் ஜெயித்துவிட்டன.

"இத்தாலிய கிழக்கு ஆப்ரிக்கயுத்தத்தில் தைரியமாகப் போர் புரிந்ததற்காக லெப்டினண்ட் பகத் என்பவருக்கும்' சுபேதார் ரிச்பால்ராம் என்பவருக்கும் "விக்டோரியா கிராஸ்" என்ற வெற்றிப்பதக்கங்கள் அளிக்கப்பட்டன.

"கிழக்கு ஆப்பிரிக்கா யுத்தம் முடிந்த பிறகு, இந்த இரண்டு இந்தியப்பட்டாளங்களுக்கு ஓய்வு கொடுக்கமுடியாமல் யுத்த நிலைமை மாறிக்கொண்டு வந்தது. 4-வது, 5-வது இந்தியப்பட்டாளங்கள் எகிப்துக்கு அனுப்பப்பட்டன.

"இந்திய மோட்டார் பட்டாளத்தின் 18-வது குதிரைப்படை ஐந்து மாத காலத்துக்கு மேல், வட ஆப்பிரிக்காவில் தோப்ரூக்கைப் பாதுகாப்பதில் பேருதவி செய்தது. இந்தப் படை 200 எதிரிகளை துப்பாக்கி முனைக்கத்தியால் கொன்று விட்டது.

### இராக்.

"இராக்கில் ரஷீத் அலி என்ற ஜெர்மனியின் கையாள் அரசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டு, பிரிட்டிஷ் உரிமைகளுக்கு விரோதமாக நடக்க ஆரம்பித்தார். அந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இரண்டு இந்தியப் படைகள் இராக்குக்கு அனுப்பப்பட்டன. ஹப்பானியாவிலுள்ள பிரிட்டிஷ் விமானச் சாலையைப் பாதுகாப்பதற்காக பஸ்ராவிலிருந்து ஒரு கூர்க்கப் பட்டாளம் ஆகாய விமான மூலமாக அனுப்பப்பட்டது. பிறகு பஸ்ராவிலிருந்து இந்தியத் துருப்புகள் வந்து இராக்கில் அமைதியை ஏற்படுத்தின.

### சிரியா.

"அடுத்தாற்போல, சிரியாவில் நடந்த சண்டையிலும் இந்தியத் துருப்புகள் திறமையாகப் போர் புரிந்தன. விஷியிலுள்ள பிரெஞ்சு அரசாங்கம் தனக்குச் சொந்தமான சிரியாவிலுள்ள ஆகாய விமானத் தளங்களை ஜெர்மானியர்களுக்குக் கொடுத்துவிட்டது. ஜெர்மானியர்கள் மெதுவாக சிரியா முழுவதும் கைப்பற்றிக் கொள்வார்கள் போல் தோன்றியது. உடனே 4-வது இந்தியப் பட்டாளத்தின் ஒரு படை சிரியாவுக்கு அனுப்பப்பட்டது. சிரியாவின் தலைநகரமாகிய டமாஸ்கசைப் பிடிக்க முடிந்தது. இந்தப் படையால்தான், இராக்கில் இருந்த இந்தியப் படைகளும் சிரியாவில் நடந்த சண்டையில் உதவி செய்தன.

### இரான்.

"கடைசியாக, பாரசீகம் அல்லது இரானில் ஜெர்மானியர்களின் சூழ்ச்சியைக் கலைப்பதற்கு இந்தியத் துருப்புகள் பேருதவி செய்தன. இரானில் ஜெர்மானியர்கள் பிரவேசித்து, இந்தியாவின் பாதுகாப்புக்கு அபாயத்தைத் தேடும்படியான நிலைமையில், பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் இரானில் பிரவேசித்தன. வடக்கிலிருந்து ரஷ்யத் துருப்புகள் இரானுக்குள் நுழைந்தன. கூடிய சீக்கிரத்தில் எதிர்ப்பு அடக்கப்பட்டது. இரானில் பிரிட்டிஷார் புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தினார்கள்.

"வேறு சில இந்தியத் துருப்புகள் மேற்குப் பாலைவனத்திலும், எகிப்து எல்லையிலும் வேலை செய்தன. எதிரிகள் எகிப்தைத் தாக்காமல் இருப்பதற்கு இவைகள் பெரிதும் உதவி செய்தன.

"மேலே குறிக்கப்பட்டவை சென்ற மூன்று அல்லது நான்கு மாதங்களில் இந்தியத் துருப்புகள் செய்த சிறப்பான காரியங்கள். "புலி தாக்குகிறது" என்ற பெயருடன் இந்திய சிப்பாய்கள் செய்த சண்டைகளைப்பற்றி ஒரு புத்தகம் சீக்கிரத்தில் வெளியிடப்போகிறார்கள்.

### அருமையான சேவை.

"இவ்வளவு தைரியமும், பெருமையும் வாய்ந்த துருப்புகள் பல யுத்த மேடைகளில் என்னுடைய தலைமையின் கீழிருந்ததைப்பற்றி நான் பெருமை கொள்ளுகிறேன். இந்திய சிப்பாய்களுடைய ராணுவப் பெருமை, மத்திய கிழக்குப் பிரதேசத்தில் மிக உன்னதமான நிலைமையில் இருக்கிறது.

"இந்தியத் துருப்புகள் தங்களுடைய நாட்டுக்கு வெகு தூரத்தில் அருமையான சேவை செய்கின்றன. இருந்தபோதிலும், அவைகள் இந்தியாவின் யுத்தத்தில்தான் ஈடுபட்டிருக்கின்றன. தங்களுடைய திறமையினாலும் தைரியத்தினாலும் யுத்தம் இந்தியாவுக்கு அருகில் வராமல் தடுக்கும் பெருந்தொண்டை இந்திய சிப்பாய்கள் செய்து வருகிறார்கள்."

# இந்தியாவில் யுத்த தளவாட உற்பத்தி

## ஆகாய விமானங்கள், கப்பல்கள், டாங்கிகள்

## இந்திய தொழிற்சாலை அபிவிருத்தி

### அரசாங்கத்தார் செய்த செலவு விவரம்

எவ்வளவு பெரிய தீமை இருந்தாலும், அதில் கொஞ்சம் நன்மையும் இருக்கும் என்று சொல்கிறார்களல்லவா? அதைப்போல, பெரிய தீமையாகிய இந்த யுத்தத்தினால், இந்தியாவுக்கு சில நன்மைகள் உண்டாயிருக்கின்றன. யுத்தத்திற்கு வேண்டிய பல சாமான்கள் செய்யும் வேலை இப்போது இந்தியாவில் நடக்கிறது. இதனால் அதிக சீக்கிரத்தில், இந்தியாவின் தொழிற்சாலை வேலைகள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. யுத்த சாமான்கள் செய்வதோடுகூட யுத்த தளவாடங்களும் இப்போது இந்தியாவில் செய்யப்படுகின்றன. யுத்த சாமான்கள் என்றால் வெடிகுண்டுகள், மின்சாரக் கருவிகள், ஸ்டீல், இரும்பு ஆயுதங்கள் முதலியவையாகும். யுத்த தளவாடங்கள் என்றால் ஆகாய விமானங்கள், யுத்தக் கப்பல்கள், டாங்கிகள் முதலியவையாகும்.

இந்தியா யுத்த தளவாட உற்பத்தியில் ஆச்சரியமான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆகாய விமானங்கள் இப்போது இந்தியாவில் செய்யப்படுகின்றன என்ற விஷயம் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். நான்கு மாதங்களுக்குமுன், அதாவது 1941-ம் வருஷம் ஜூலையில், இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட ஆகாய விமானத் தொழிற்சாலையில், முதல் இந்திய ஆகாய விமானம் செய்யப்பட்டது. இப்போதிருக்கிற நிலைமையில் ஆகாய விமானம் செய்வதற்கு வேண்டிய சகல கருவிகள், ஆணிகள் முதலியன இந்தியாவில் செய்யமுடியவில்லை. ஆகையால், ஆகாய விமானக்கருவிகள், பாகங்கள், யந்திரங்கள் முதலியன இந்தியாவுக்கு அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்படுகின்றன. அவைகளை எல்லாம் சீர்படுத்தி, பூட்டி, அமைக்கும் வேலை இங்கு செய்யப்பட்டுவருகிறது. ஆகாய விமானம் அமைக்கும் இந்த வேலை ஒரு இந்தியக் கம்பெனிக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த கம்பெனியுடன் இந்திய அரசாங்கத்தார் இதன் சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

### விமானப் பாகங்கள்

1940-ம் வருஷ ஆரம்பத்தில், ஆகாய விமானங்களின் எல்லா பாகங்களையும் இந்தியாவிலேயே செய்யமுடியுமா என்ற விஷயம் விசாரிக்கப்பட்டது. ஆகாய விமானத் தலைமை இன்ஸ்பெக்டர் இந்த விசாரணையை நடத்தினர். அப்போது நம் நாட்டில் வேண்டிய ஸ்டீல் கிடைக்கவில்லை. ஆனால் டாடா கம்பெனியார், இப்போது, விமானம் செய்வதற்கு வேண்டிய ஸ்டீல் தகடுகளைச் செய்கிறார்கள். அந்தத் தகடுகளை வேண்டிய அளவிற்கு நீட்டுவது, சுருட்டுவது, வெட்டுவது முதலிய காரியங்களைச் செய்யவேண்டும். இப்படிச் செய்தால்தான் ஸ்டீல் குழாய்கள், வழவழப்பான கம்பிகள், பித்தளைக் குழாய்கள், வளையும்படியான ஸ்டீல் கம்பிகள் முதலியன செய்வதற்கு முடியும். இதற்கு ஒரு பெரிய யந்திரசாலை வேண்டும். அந்த யந்திரசாலை இந்தியாவில் இல்லை.

இந்தியாவில் செய்யக்கூடிய ஆகாய விமான பாகங்களைப்பற்றி, விமானத் தலைமை இன்ஸ்பெக்டர் ஒரு 'ஜாப்தா' தயார் செய்தார். அதைக்குறித்து அரசாங்கத்தார் ஆலோசனை செய்திருக்கிறார்கள். எந்தெந்த பாகம் இப்போது இந்தியாவிலேயே செய்யப்படுகிறது, சில யந்திர மாறுபாடுகள் செய்தால் எந்தெந்த பாகம் இனிமேல் இங்கேயே செய்யப்படலாம், எந்தெந்த பாகங்கள் வெளிநாடுகளிலிருந்து தருவிக்கவேண்டும், எந்தெந்த நாடுகளிலிருந்து அந்த பாகங்கள் கிடைக்கும், எந்த விதமாக அவைகளை நம் நாட்டுக்கு யுத்த காலத்தில் கொண்டுவரமுடியும்—இதுபோன்ற பல விஷயங்களை அரசாங்கத்தார் ஆலோசனை செய்தார்கள்.

### அரசாங்க ஆலோசனை

இதல்லாமல், எந்தவிதமான ஆகாய விமானத்தைச் செய்வது என்ற விஷயமும் கவனிக்கப்பட்டது. நாளுக்குநாள் விமான அமைப்பு மாறிக்கொண்டே வருகிறது. இன்றைக்கு ஒரு வெடிகுண்டு விமானம் சிறப்பாக வேலைசெய்துகொண்டு வரும். நாளைக்கு அதைவிட சிறப்பான விமானம் தயார் செய்யப்படலாம். ஆகையால், எப்படிப்பட்ட விமானத்தை இந்திய விமானத் தொழிற்சாலையில் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்? வெடிகுண்டு விமானங்கள் மாத்திரம் செய்யலாமா? அல்லது 'பைடர்' என்ற போர் விமானங்களும் செய்யலாமா? கொஞ்சங்கொஞ்சமாக, விமானங்கள் செய்வதற்கு வேண்டிய எல்லா பாகங்களும், யந்திரங்களும் இந்தியாவிலேயே செய்யலாமா? ஆகாய விமானங்கள் செய்வதற்கும், ஓட்டுவதற்கும், 'ரிபேர்' முதலியன செய்வதற்கும், இந்தியாவில் திறமையான ஆட்களைத் தயார் செய்ய முடியுமா? இதைப்பற்றியெல்லாம் இந்திய அரசாங்கத்தார் நன்றாக ஆலோசனை செய்திருக்கிறார்கள்.

இந்த ஆலோசனை முடிந்தவுடன், ஒரு ஆகாய விமானத் தொழிற்சாலை ஏற்படுத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. தொழிற்சாலையை ஏற்படுத்திய இந்திய கம்பெனிக்கு அரசாங்கத்தார், பெரிய யந்திரங்கள், சிறிய யந்திரங்கள், யந்திரக் கருவிகள், சாமான்கள் செய்யும் மூலப்பொருள்கள், இவைகளையெல்லாம் கொடுத்தார்கள். "இந்துஸ்தான் ஆகாய விமானத் தொழிற்சாலை" என்ற பெயருடன் மைசூர் சமஸ்தானத்தில் பெங்களூர் நகரத்தில் இந்தத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது.

இந்திய விமானத் தொழிற்சாலையில் முதல் முதலாக அமைக்கப்பட்ட ஆகாய விமானத்துக்கு "ஹார்லோ" என்று பெயரிடப்பட்டது. இது அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்பட்ட கருவிகளையும், சாமான்களையும் கொண்டு செய்யப்பட்டது. விமான மாலுமிகளைப் பயிற்சி செய்விப்பதற்காக இந்த விமானமும், இதே மாதிரி செய்யப்படும் இதர விமானங்களும் உபயோகப்படுத்தப்படும். போர் விமானங்களும், வெடிகுண்டு விமானங்களும் உபயோகப்படும் காரியங்களுக்கு "ஹார்லோ" விமானத்தை உபயோகப்படுத்தலாம். இது அமெரிக்காவிலுள்ள புதுமாதிரியான பயிற்சி விமானத்தைப் பார்த்து செய்யப்பட்டது.

### போர் விமானம்

பெங்களூர் விமானத் தொழிற்சாலையில் மற்றொரு விமானமும் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு "கர்ட்டிஸ் ஹாக்" என்று பெயர். இதுதான் இந்தியாவில் செய்யப்பட்ட முதல் 'பைடர்' என்ற போர் விமானம். இதுவும் அமெரிக்க விமானத்தைப் பார்த்து செய்யப்பட்டது. இதில் ஒருவர்தான் உட்காரலாம். இதற்கு ஒரே எஞ்சின்தான் இருக்கிறது.

இந்த விமானங்கள் செய்வதற்கு வேண்டிய பாகங்கள் அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்படுகின்றன. ஆனால், போகப்போக, எஞ்சின் தொழிற்சாலை அபிவிருத்தி அதிகப்பட அதிகப்பட, இந்த பாகங்களெல்லாம், இந்திய மூலப்பொருள்களால் பெங்களூர் தொழிற்சாலையில் செய்யக்கூடும் என்று நம்பப்படுகிறது. வெளிநாட்டுச் சாமான் உதவியில்லாமல், இந்தியாவில் விமானங்கள் செய்யலாம். ஆனால் விமான எஞ்சின்களும், குறிப்புகள் பதியும் யந்திரங்களும் இந்தியாவில் செய்யமுடியாது. அவைகள் சில வருஷங்கள் வரைக்கும் வெளிநாட்டிலிருந்து தான் வரவேண்டும்.

இந்தியாவில் செய்யப்படும் யுத்த தளவாடங்களுள் இரண்டாவது : கப்பல்கள். பலமானதும், ஆயுத முஸ்தீப்பு கொண்டதுமான 'ட்ராலர்' என்ற கப்பல்களும், இதர சிறு கப்பல்களும் இந்தியாவில் இப்போது செய்யப்படுகின்றன. 39 லட்சம் ரூபாய் பொறுமான சிறு படைக்கப்பல்கள் செய்யும்படி இந்தியாவுக்கு ஒரு 'ஆர்டர்' கிடைத்திருக்கிறது. இந்தியாவில் எந்தவிதமான கப்டல்கள் செய்யமுடியாதென்று தெரிகிறதோ, அவைகளுக்குத்தான் வெளியில் 'ஆர்டர்' கொடுக்கப்படுகிறது. பிரிட்டிஷ் கப்பற்படைக்காக, மிதக்கவிடும் கப்பற்சாலைகள் செய்வதற்கு இந்தியா ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த கப்பற்சாலைகள் செய்யும் வேலை கூடிய சீக்கிரம் ஆரம்பிக்கப்படும்.

ஒரு பெரிய கப்பல்கட்டும் சாலையை ஏற்படுத்துபவர்களுக்கு 'சாசிஸ்' அல்லது மோட்டாரின் முக்கியமான அடிப்பாகத்தை, அந்த ரயில்வண்டி கொண்டு போகிறது. மோட்டார் வண்டிகளின் 'பாடி'கள் கட்டுவது இப்போது அதிகமாக விருத்தி செய்யப்படுகிறது. ஒரு தொழிற்சாலை மாத்திரம் அந்த வருஷம் (1941-ம்ஹு) ஜூன்மாதத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 500 'பாடி'கள் கட்டும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

## கப்பல் திட்டம்

யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது, புதிதாக கப்பல்கட்டும் திட்டம் ஏற்பாடுசெய்வது மிகவும் கஷ்டமான காரியம். ஏனென்றால், கப்பல்களை ஓட்டும் எஞ்சின்களை இந்தியாவில் செய்யமுடியாது. கப்பல்களின் அடிப்பாகத்தை நிர்மாணிப்பதற்கு ஸ்டீல் வேண்டியதாயிருக்கிறது. கப்பல்கட்டும் சாலைகளை நன்றாக முஸ்தீப்புசெய்வதற்கு அனேக சாமான்கள் தேவையாயிருக்கின்றன. இந்த கஷ்டங்களை நீக்குவதற்காக, இந்திய அரசாங்கத்தார், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் மூலமாக அமெரிக்காவின் உதவியை நாடியிருக்கிறார்கள். அமெரிக்காவிலிருந்து வேண்டிய சாமான்கள் முதலியன இந்தியாவுக்கு வருகின்றன.

கல்கத்தா, பம்பாய், கராச்சி, இந்த மூன்று நகரங்களிலும் கப்பல்களை 'ரிபேர்' செய்வதற்காக சில கம்பெனிகள் இருக்கின்றன. கரையோரப் பிரதேசத்தில் செல்லும் கப்பல்களையும், நடுக்கடலுக்குச் செல்லும் கப்பல்களையும், பழுதுபார்ப்பதோடு, சிறிய கப்பல்கள் செய்யும்வேலையும் இந்தக் கம்பெனிகள் செய்கின்றன.

இந்தியாவில் செய்யப்படும் யுத்ததளவாடங்களுள் மூன்றாவது : டாங்கிகளும், யுத்தமோட்டார் வண்டிகளும். இந்தியாவினுடைய சொந்த உபயோகத்துக்காக 3,000 யுத்தமுஸ்தீப்பு மோட்டார் வண்டிகள் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு ரயில்வே தொழிற்சாலை, டாங்கிகளும், யுத்தமோட்டார் வண்டிகளும் செய்வதற்காக சீர்திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் ஜனவரி மாதம் முதல், இரண்டு நாளைக்கு ஒரு தடவை, போர்டு கம்பெனியாரின் யந்திரசாலையிலிருந்து ஒரு 'ஸ்பெஷல்' ரயில் வண்டி போகிறது. மோட்டார் வண்டிகளின் 'பாடி' அல்லது மேல்பாகம் கட்டுகிறவர்களுக்கு 'சாசிஸ்' அல்லது மோட்டாரின் முக்கியமான அடிப்பாகத்தை, அந்த ரயில்வண்டி கொண்டுபோகிறது. மோட்டார் வண்டிகளின் 'பாடி'கள் கட்டுவது இப்போது அதிகமாக விருத்திசெய்யப்படுகிறது. ஒரு தொழிற்சாலை மாத்திரம் இந்த வருஷம் (1941) ஜூன் மாதத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு 500 'பாடி'கள் கட்டும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.



## யுத்த மோட்டார் வண்டிகள்

1941-ம் வருஷத்தில், ஆயிரக்கணக்கான முழு மோட்டார் யுத்தவண்டிகள் செய்யப்படுகின்றன ; இன்னும் அநேகம் செய்யப்பட்டுவருகின்றன. முழு யுத்த முஸ்தீப்பு உடைய வண்டிகளிலிருந்து, மரத்தால் செய்யப்பட்ட 'பாடி'களை உடைய வண்டிகள் வரைக்கும் பலவிதமான யுத்தமோட்டார்கள் இந்தியாவில் செய்யப்படுகின்றன.

சில முக்கியமான காரணங்களுக்காக, இந்த வண்டிகளில் பெரும்பாலும் பம்பாய் மாகாணத்தில் செய்யப்படுகின்றன. இப்போது வாரம், வாரம், அதிகமான யுத்த மோட்டார்கள் பம்பாயிலிருந்து, வெளியே இந்தியாவின் பல பாகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவைகளினுடைய எண்ணிக்கை அதிகமாயிருப்பதால், ரயில் வழியாக மாத்திரம் இவைகளை அனுப்ப முடியாது. ரோட் வழியாகவே, இந்தியாவின் வெவ்வேறு பாகங்களுக்கு இந்த யுத்த மோட்டார் வண்டிகள் செல்லும்.

யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன், இந்தியாவில் 5,000 யுத்த மோட்டார் வண்டிகள் இருந்தன. இப்போது 60,000 வண்டிகள் இருக்கின்றன. இதில் மிகவும் சிக்கலானதும் பலம்பொருந்தியதுமான வண்டிக்கு 'டாங்கி'கள் என்று பெயர். இதனுடைய 'பாடி'யும் மேல் மூடியும் இரும்பு தகடுகளால் செய்யப்பட்டன. யுத்தத்திற்குமுன், முழு 'டாங்கி' வண்டியும் அப்படியே பிரிட்டனிலிருந்து வந்தது. இப்போது அமெரிக்காவிலிருந்து 'டாங்கி'களில் அடிப்பாகமாகிய 'சாசிஸ்' ஏராளமாக இந்தியாவுக்கு வருகின்றன ; 'டாங்கி'கள் செய்வதற்கு பீரங்கிக் குண்டுகள் தாங்கும் தகடுகள் வேண்டியிருக்கிறது. டாடா கம்பெனியார் இப்போது அப்படிப்பட்ட தகடுகளைச்செய்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கணக்கான டன் தகடுகள் அவர்களுடைய தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. யுத்த சாமான் தொழிற் சாலைகளிலும், ரயில்வே தொழிற்சாலைகளிலும், இந்திய ஸ்டீல் தகடுகளால் 'டாங்கி' களின் 'பாடி' கள் செய்யப்படுகின்றன.

## பீரங்கி ; வெடிகுண்டு.

ஆகாய விமானங்கள், யுத்தக் கப்பல்கள், டாங்கிகள், இவைகளெல்லாம் பீரங்கிகளும், வெடிகுண்டுகளும் இல்லாவிட்டால் பிரயோசனமில்லாமல் போய்விடும். ஆகையால் இது சம்பந்தமாக இந்திய அரசாங்கப் பாதுகாப்பு இலாகாக்கள் கவனம் செலுத்தியிருக்கின்றன. அதற்காக ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். அந்த கமிட்டி ஒரு திட்டத்தை அங்கீகாரம் செய்திருக்கிறது. அதன்படி, 40 லட்சம் ரூபாய் செலவில், இந்தியாவிலுள்ள யுத்த தொழிற்சாலைகள் பெரியதாக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டன. புதிய யந்திரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. பீரங்கிகள், பீரங்கி வண்டிகள், வெடிகுண்டு மருந்து, ஆகாய விமான வெடிகுண்டுகள், லேசான யந்திர பீரங்கிகள், 3·7 அங்குல விமான எதிர்ப்பு பீரங்கிகளை வைக்க முக்காலிகள் முதலியன இந்த தொழிற்சாலைகளில் செய்யப்படும்.

1½ கோடி ரூபாய் செலவில், சிறிய யுத்த ஆயுதங்கள் செய்வதற்கு தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு வெளியிலிருந்து யந்திரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. 2,000 டன் எடையுள்ள பீரங்கி செய்யும்படியான அச்சுவார்ப்படம் வந்து சேர்ந்திருக்கிறது. உயர்ந்த வெடிகுண்டுகள் முதலியன செய்வதற்கு 90 லட்சம் ரூபாயில் ஒரு யந்திரசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உயர்தரமான ஸ்டீல் ஆயுதங்கள் முதலியன செய்வதற்கு 1 கோடி ரூபாய் செலவில் யுத்த சாமான் தொழிற்சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. பீரங்கிகள் முதலியன செய்வதற்காக 78 லட்சம் ரூபாயில் புதிய தொழிற்சாலைப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. லேசான யந்திர பீரங்கிகள் துப்பாக்கிகள் முதலியன செய்வதற்காக 73 லட்சம் ரூபாயில் ஒரு புதிய பகுதி நிர்மாணிக்கப்பட்டது. பீரங்கி வெடிகுண்டுகள் சம்பந்தமாக 94 லட்சம் ரூபாயும், விமான வெடிகுண்டுகள் முதலியன சம்பந்தமாக 34 லட்சம் ரூபாயும், குதிரை சேணம் முதலியன சம்பந்தமாக 3 லட்சம் ரூபாயும், தொழிற்சாலைகளைப் புதுப்பித்து விசாலப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டன. இந்த

யுத்த தளவாட திட்டத்திற்கு மொத்த செலவு 7 கோடி ரூபாய்.

இந்த விதமாக நம்முடைய நாட்டில், யுத்த தளவாடங்களும், இதர யுத்த சாமான்களும் தயார்செய்வதற்காக, இந்திய அரசாங்கத்தார் மிகுந்த கவனம் எடுத்துக்கொண்டு, ஏராளமான பொருள் செலவு செய்து, யுத்த தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்திருக்கிறார்கள்.

# ஹிட்லர், ஸ்டாலின், சர்ச்சில்

## மூன்று பிரசங்கங்கள்


### ஜப்பானுக்கு ஒரு எச்சரிக்கை

சென்றவாரம், மூன்று நாடுகளின் தலைவர்கள் யுத்தத்தைப்பற்றி பிரசங்கம் செய்திருக்கிறார்கள். ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லர், வழக்கம்போல, வீண் பெருமையும் அட்டகாச வார்த்தைகள் நிறைந்ததுமான ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அவர் கூறியதைப்பற்றி வெவ்வேறு விதமான நகல்கள் வெளிவந்திருக்கின்றன. இதனால் முதலில் செய்யப்பட்ட பிரசங்கம் வேறு, என்று தெரிகிறது. பிரிட்டன் தன்னுடன் சமாதானத்துக்கு வராததைப்பற்றிக் குறைகூறி, யூதர்களைக் கண்டித்து, ரஷ்யாவின் நஷ்டங்களைப்பற்றி அபாண்டமான பொய்களைக் கூறி, ஐரோப்பாவிலுள்ள நாடுகள் தன்னுடைய "புதிய சமுதாயத் திட்டத்"துக்கு ஆதரவளிப்பதாக உள்ளதை மறைத்துச்சொல்லி, ஹிட்லர் பேசியிருக்கிறார்.

ரஷ்யாவின் தலைவர், மிஸ்டர் ஸ்டாலின், மாஸ்கோவில் ஒரு முக்கியமான பிரசங்கம் செய்திருக்கிறார். அதில் ஹிட்லரிசம் முடிவில் அடியோடு அழிக்கப்படும் என்று கூறியிருக்கிறார். ரஷ்யாவுக்கு டாங்கிகளும், விமானங்களும் வேண்டியிருக்கின்றனவென்றும், பிரிட்டனும் அமெரிக்காவும் ஒற்றுமையுடன் ரஷ்யாவுக்கு உதவி செய்கின்றனவென்றும், ஹிட்லரை நெப்போலியனுக்கு உபமானமாகக் கூறக்கூடாதென்றும், அது ஒரு பூனையைச் சிங்கத்துக்குச் சமமாகக் கூறுவதைப்போலிருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், லார்டு மேயர் "மான்ஷன் ஹவுசி"ல் கொடுத்த விருந்தில், ஜப்பானுக்கு ஒரு எச்சரிக்கை செய்திருக்கிறார். பிரிட்டிஷ் கப்பற்படைபலம் ஜப்பானின் அதிக்கிரமத்தைத் தடுக்குமென்றும், அமெரிக்காவோடு ஜப்பான் யுத்தம் செய்யுமானால், ஒரு மணி நேரத்துக்குள் பிரிட்டன் ஜப்பானுடன் போர் தொடுக்குமென்றும் அறிவித்தார். பிரிட்டிஷ் விமானப் படைக்குச் சரிசமானமாக ஜெர்மன் விமானப்பலம் வந்திருக்கிறதென்று தெரிவித்தார். பிரிட்டன் தனிப்பட்டு நின்றாலும், ஹிட்லருடன் எந்தக்காலத்திலும் சமாதானம் செய்து கொள்ளாது என்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

## ஜெர்மனிக்காக வெடிகுண்டுகள்.



பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த ஒரு வெடிகுண்டு விமானத்தில் ஏற்றப்படுவதற்காக பல வெடி குண்டுகள் தயாராயிருப்பதை இப்படத்தில் காணலாம். இந்த வெடிகுண்டு வி மானமும் இதர வெடிகுண்டு விமானங்களும், பர்லின், ஹாம்பர்க் முதலிய முக்கியமான பட்டணங்களை இரவில் தாக்கின என்று பின்னால் தெரியவந்தது.

# அமெரிக்காவில் பெரிய மாறுதல்

## நடுநிலைமைச் சட்ட திருத்தம்.

அமெரிக்காவின் நடுநிலைமைச்சட்டத்தை, அமெரிக்க செனெட் சபை மாற்றியிருக்கிறது. இது சம்பந்தமான மசோதா நிறைவேற்றப்பட்டது. இனிமேல் அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் யுத்த முஸ்தீப்புடன் போர் நடக்கும் துறை முகங்களுக்கும், பிரதேசங்களுக்கும் போகலாம் என்று திருத்தச் சட்டம் அனுமதி கொடுக்கிறது. இதனால் அமெரிக்காவிலிருந்து பிரிட்டனுக்கும் ரஷ்யாவுக்கும் யுத்த சாமான்கள் உதவி தாராளமாகச் செய்வதற்கு அனுகூலம் ஏற்பட்டிருக்கிறது.

நடுநிலைமைச் சட்டத்தைத் திருத்துவதற்காக, பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் அதிக கஷ்டப்பட்டார். அதை அடியோடு நீக்கிவிட வேண்டுமென்று முயற்சி செய்தார். அவருடைய முயற்சி பயனளிக்கவில்லை. கடைசியில் திருத்தம் செய்வதில் மாத்திரம் அவருக்கு வெற்றி கிடைத்தது. அட்லாண்டிக் கடலில் நடக்கும் யுத்தம் இனிமேல் அதிக மும்முரமாகலாம். அமெரிக்கா யுத்தத்தில் இறங்காவிட்டாலும், இனிமேல் ஏற்படும் நிலைமை அதன் நடு நிலைமைப் போக்கை அடியோடு மாற்றக்கூடியதாய் இருக்கலாம்.

நடுநிலைமைச் சட்ட மாறுதலினால் அமெரிக்கா யுத்தத்தின் போக்கிலும், அதன் முடிவிலும் இப்போதிருப்பதை விட அதிக சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது.

# வாரச் செய்திக் குறிப்புகள்

## 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும் விமானப் போர்

சென்ற வாரம், "மான்ஷன் ஹவுசில்" லண்டன் லார்டு மேயர் கொடுத்த பகல் விருந்தில், மிஸ்டர் சர்ச்சில் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் ஒரு முக்கியமான விஷயத்தை அறிவித்தார். ஜெர்மனியின் "லுப்டுவாப்" என்ற விமானப் படைக்கு சரிசமானமான நிலையை பிரிட்டிஷ் விமானப் படை அடைந்துவிட்டது என்று அவர் தெரிவித்தார். இதுவரைக்கும் ஜெர்மன் விமானப்படை, பிரிட்டிஷ் விமானப் படையைவிட எண்ணிக்கையில் அதிகமாயிருந்தது. இப்போது அந்த உயர்வு குறைக்கப்பட்டது. இதற்குக் காரணம் பல. ஜெர்மனியின் விமானங்கள் பிரிட்டனிலும், ரஷ்யாவிலும் ஏராளமாக சுட்டு விழ்த்தப்பட்டன. பிரிட்டனில் இப்போது அதிகப்படியான விமானங்கள் செய்யப்படுகின்றன. இதல்லாமல், அமெரிக்காவிலிருந்து புதிய விமானங்கள் செய்யப்பட்டு பிரிட்டிஷ் விமானப்படையில் சேர்க்கப்படுகின்றன. கடைசியாகச் செய்யப்பட்ட "லிபரேடர்" என்ற அமெரிக்க விமானங்கள் பிரிட்டிஷ் விமானப் படையுடன் சேர்ந்து திறமையாக வேலை செய்கின்றன.

ஜெர்மனியின் முக்கியமான பல பட்டணங்கள் சென்றவாரம் பிரிட்டிஷ் விமானப்படையால் தாக்கப்பட்டன. வில்ஹும்ஷேவன், ஹாம்பர்க், ஹுஹேவர், பர்லின், கலோன், மான்ஹீம், ரூர் பிரதேசம், ரைன்லாந்து, ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளில் முக்கியமான இடங்கள்—இவைகளின்மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

இங்கிலாந்தின் கிழக்குக் கரையோரப் பிரதேசத்தில் ஜெர்மன் விமானங்கள் சில வெடிகுண்டுகளைப் போட்டன.

## 2. இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல்

அபிசீனியாவில், கோண்டாருக்கு வடகிழக்குப் பிரதேசத்தில் இத்தாலியர்களோடு சண்டை நடந்தது. பல வீடுகளின்மேல் வெடிகுண்டுகள் போடப்பட்டன. திரிபோலிக்குத் தெற்கில் இருக்கும் ஆகாய விமானச்சாலை தாக்கப்பட்டது. பென்காசியின்மேல் பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

இத்தாலிக்குச் சொந்தமான சிசிலித் தீவை பிரிட்டிஷ் விமானப்படை தாக்கிற்று. ஒரு கடற்படைத் தளமும், ஒரு ராணுவச்சாலையும் வெடி குண்டுகளால் தாக்கப்பட்டன. ஒரு தொழிற்சாலை நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்தது. இத்தாலியின் கடற்கரைப் பட்டணமாகிய நேப்பிள்ஸ் பிரிட்டிஷ் விமானங்களால் தாக்கப்பட்டது. ரயில்வே ஸ்டேஷன்மேலும், துறைமுகத்தின்மேலும் வெடி குண்டுகள் போடப்பட்டன. பிரிண்டிசி என்ற இடமும் தாக்கப்பட்டது.

மத்தியதரைக் கடலில் எதிரிகளின் 'கான்வாய்' துணைக் கப்பல்களை பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

## 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்

அமெரிக்கா, ரஷ்யாவுக்கு யுத்த சம்பந்தமாக 100 கோடி டாலர் வட்டியில்லாமல் கொடுத்திருக்கிறது. யுத்தம் முடிந்து ஐந்து வருஷத்துக்குப் பிறகு இந்தக் கடன் கொஞ்சங் கொஞ்சமாக திருப்பிக் கொடுக்கலாம் என்று அமெரிக்கா ரஷ்யாவுக்குத் தவணை கொடுத்திருக்கிறது. ரஷ்ய சர்வாதிகாரி, மிஸ்டர் ஸ்டாலின், இதற்காக அமெரிக்காவுக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவித்திருக்கிறார்.

நடு நிலைமைச் சட்டத்தை மாற்றுவதற்கு அமெரிக்க செனெட் சபை அனுமதியளித்திருக்கிறது. இந்த சீர்திருத்தம் யுத்த சரித்திரத்தில் மிக முக்கியமானது. இதனால் அமெரிக்க வர்த்தகக் கப்பல்கள் யுத்த முஸ்தீப்புடன் அட்லாண்டிக் கடலில் செல்லும். இனிமேல் அமெரிக்கக் கப்பல்களும், பிரிட்டிஷ் கப்பல்களும் அட்லாண்டிக் கடல் யுத்தத்தில் ஜெர்மனிக்கு எதிராக ஒன்று சேர்ந்து போர் செய்வதற்கு, இந்த சட்ட திருத்தம் இடம் கொடுக்கிறது.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் கடைசியாகச் செய்த சமாதானக் கொண்டாட்ட நாள் பிரசங்கத்தில் உலகத்தின் பாதுகாப்பு அமெரிக்காவின் கையிலிருக்கிறது என்று கூறியிருக்கிறார்.

## 4. ரஷ்யாவும், பின்லாந்தும்

ரஷ்யப் போர்முனையில் யுத்தம் கடுமையாக நடந்துகொண்டிருக்கிறது. மாஸ்கோவுக்குத் தெற்கில் ஒரு ஆற்றங் கரையில் பெரிய சண்டை நடக்கிறது; லெனின்கிராடைச்சுற்றி ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்துத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு லட்சம் போலிஷ் சிப்பாய்கள், டான் பிரதேசத்தில் உள்ள மார்ஷல் தீமோ ஷெங்கோவின் 'ரிசர்வ்' படையில் சேர்ந்துவிட்டார்கள். திக்வின் என்ற இடத்தைப் பிடித்துவிட்டதாக ஜெர்மானியர்கள் கூறுவது ஊர்ஜிதப்படவில்லை.

பின்லாந்து ரஷ்ய யுத்தத்திலிருந்து விலகிக்கொள்ள முடியாதென்று அமெரிக்காவுக்குப் பதிலளித்துவிட்டது.

### கடுமையான யுத்தம்.

மாஸ்கோவையும், க்ரைமியாவையும் ஜெர்மானியர் மிகக் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கின்றனர். ராஸ்டாவ், டானெட்ஸ் நதிக்கரை, இவற்றின்மீதும் தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. மாஸ்கோவை நேரிடையாகத் தாக்கிப் பிடிப்பது என்பது முடியாத காரியம் என்று பெர்லின் ராணுவ நிபுணர்கள் கூறுகிறார்கள். இதை மெய்யாகவே அவர்கள் சொல்லுகிறார்களோ, அல்லது ஏமாற்றுவதற்காக சொல்லுகிறார்களோ என்பது தெரியவில்லை.

ஜெர்மானியர் துலாவை நோக்கி மிகக் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் இவர்கள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் என்று ரஷ்யர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

கலினின் பகுதியில் ஜெர்மானியர் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதை ரஷ்யர்கள் எதிர்பார்த்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

ஆனால் கலினின் பகுதியில் உள்ள ரஷ்யத் துருப்புகளைப் பிரித்து துலா பகுதிக்கு அனுப்ப ரஷ்யர்கள் விரும்பவில்லை. ஏனெனில் இதுவரை ஜெர்மானியர் வெற்றிகொள்ளாத கலினின் பகுதியில் அவர்களுக்கு வெற்றி கொடுக்கக்கூடாது. கலினின் பகுதியில் முன்னேறி மாஸ்கோவை வளைத்துக்கொண்டுவிடலாம் என்பது ஜெர்மானியரின் கருத்து. இதற்குள் துலா பகுதியிலிருந்து கிழக்கே சென்று சைபீரியாவில் உள்ள முக்கிய ரயில் பாதைகளைப் பிடித்துக் கொள்ளலாம் என்று ஜெர்மானியர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

க்ரைமியாவுக்குள் ஜெர்மானியர் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள் என்பது ரஷ்ய அறிக்கைகளிலிருந்து தெரியவில்லை. பெர்லினிலிருந்து கிடைக்கும் செய்திகளிலிருந்து ஜெர்மானியர் செபாஸ்டபோலை நோக்கி இப்பொழுது முன்னேறமாட்டார்கள் என்று தெரிகிறது. செபாஸ்டபோல் ரஷ்யாவின் முக்கியமான கடற்படைத் தளம். ஆனால் இதைப் பிடிப்பது சுலபமான காரியமல்ல. ஆகையால் இதற்குப்பதிலாக கெர்ச் நகரத்தை நோக்கி ஜெர்மானியர்கள் செல்வார்கள் என்று தெரிகிறது.

### ஜெர்மனியின் பிரயத்தனம்.

நவம்பர் மாதத்திலும், குளிர்காலத்திலும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதற்காக ஜெர்மானியர்கள் தயார்செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ஒரு ராணுவ நிபுணர் கருதுகிறார் :—

1. மாஸ்கோவைச் சுற்றி வளைத்துக்கொண்டு, கிழக்கேயிருந்து புதிய ரஷ்யப் படைகள் தலைநகருக்கு வராமல் தடுப்பது.

2. டானெட்ஸ் தீரத்தை நேர்முகமாகத் தாக்குவது; கார்காவிலிருக்கும் ரஷ்யச் சேனையைச் விரட்டுவது.

3. காகஸஸை ரஷ்யாவிலிருந்து பிரிப்பதற்காக ராஸ்டாவிலிருந்து அஸ்ட்ரகானுக்கு ஒரு சேனை கொண்டுவருவது.

4. ராஸ்டாவ், டான், ஆகிய இந்த பிரதேசங்களுக்கு ரஷ்யர்களை இழுத்தல்.

5. க்ரைமியாவின் மூலமாக வட காகேசியாவுக்குள் நுழைதல்.

7. ஈரானிலிருந்து வரும் நேசதேச சப்ளை பாதையை க்ராஸ்னடார், க்ராஸ்னி இவற்றுக்கு மத்தியில் துண்டித்து விடுதல்.

## கப்பல்களுக்கு உத்தரவு.

தெற்கு ரஷ்யாவில் உள்ள ஒரு முக்கியமான பட்டணம் ராஸ்டாவ் என்பது ; இது தொழிற்சாலைகள் உள்ள பட்டணம். இந்தப் பட்டணத்திலிருந்து முன் ஜாக்கிரதையாக தொழிலாளிகள் வெளியேறி விட்டனர். தளவாடங்களும் வெளியேற்றப்பட்டு விட்டன.

டான்நதியில் உள்ள ரஷ்யக் கப்பல்களும், படகுகளும் உடனே வால்கா நதிக்கும் காஸ்பியன் கடலுக்கும் செல்ல வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. ஜெர்மானியர் ராஸ்டாவை ஒருவேளை பிடித்துக்கொள்ளும்பட்சத்தில் காகசசிலிருந்தும் ஈரானிலிருந்தும் சப்ளைகள் கொண்டுவர, முக்கியமாக பெட்ரோல் எண்ணெய் கொண்டுவர, இந்தக் கப்பல்களும் படகுகளும் உதவியாயிருக்கும்.

## யூக்ரெயின் பிரதேசம்.

ஜெர்மானியர் யூக்ரெயின் பிரதேசத்தைத் தாக்கிய தன் நோக்கம் நான்கு. அவையாவன :—(1) ரஷ்ய சேனையின் பலத்தை முறிப்பது ;

(2) ரஷ்ய வயல்களைப் பிடித்துக்கொண்டு, தானியம் கிடைத்தமட்டில் சேர்த்துவைப்பது ;

(3) ரஷ்யாவின் முக்கிய இரும்புத் தொழிற்சாலைகளைப் பிடித்துக்கொள்வது ;

(4) கருங்கடல் கப்பல் படையை நீக்கிவிடுவது.

ரஷ்ய சேனைகளுக்கு எங்கிருந்து எண்ணெய் போய்க்கொண்டிருக்கிறதோ அதைத் தடுத்து அந்த எண்ணெய் பிரதேசங்களைத் தான் உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்று ஜெர்மனி விரும்புகிறது. இந்த நோக்கம் ஒருவேளை நிறைவேறினால் ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள பிரிட்டிஷ் படைகளையும் நேசதேசப் படைகளையும் மத்தியதரைக் கடலில் உள்ள பிரிட்டிஷ் கப்பல் படைத்தளங்களையும், தாக்கலாம் என்று ஜெர்மனி பேராசைகொண்டு இருக்கிறது. ஜெர்மானியர் முன்னேற்றம் வேகமாகப் போகுமா அல்லது நம் நேச நாடான ரஷ்யாவுக்கு நாம் அனுப்பும் உதவி முன்னால் போய்ச் சேருமா என்பது போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தது. காகசசுக்குச் செல்ல சுலபமான பாதைகள் கிடையாது. தளவாடங்களையோ துருப்புகளையோ கராச்சியிலிருந்து ரயில் மார்க்கமாக ஈரான் எல்லைக்கு அனுப்பி, அங்கிருந்து ரயில் வழியாகவும் ரஸ்தா வழியாகவும் காஸ்பியன் கடல் துறைமுகத்துக்கு அனுப்பலாம். அல்லது டிரான்ஸ்—ஈரானிய ரயில் பாதை வழியாக அனுப்பலாம். அல்லது பஸ்ராவிலிருந்து கானக்கனுக்கு ரயிலில் அனுப்பி அங்கிருந்து 600 மைல் தூரம் மோசமான ரஸ்தா வழியாக டப்ரிசுக்கு அனுப்பலாம். அனுப்பினாலும் அநேக கஷ்டங்களும் சிரமமும் உள்ளன. இந்தக் கஷ்டங்கள் சமாளிக்கப்பட்டு வருகின்றன. இந்த மாதிரியான சமயங்களில் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்துவதில் பிரிட்டிஷ் நிர்வாக அதிகாரிகள் மிகவும் கெட்டிக்காரர்கள் என்று பெயர் வாங்கியிருக்கின்றனர். அவர்களுடைய முயற்சி பலனளித்துக் கொண்டுவருகிறது.

## செபாஸ்டபோல் பாதுகாப்பு

செபாஸ்டபோல் மிகவும் பலப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் ரஷ்யக் கடற்படை தளமாகும். ஆனால் சோவியத் கருங்கடல் கப்பல்படை இனிமேல் இதை உபயோகிக்க முடியாது. காகசிய கரையில் உள்ள நவராசிஸ்க்போன்ற தளங்களைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கும். ஆனால் இந்தத் தளத்துக்கும் ஆபத்து ஏற்படும்போலிருக்கிறது. இது கெர்ச்சிலிருந்து 80 மைலுக்கு அப்பால்தானிருக்கிறது. ஜெர்மானியர் கெர்ச் நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். கெர்ச் எந்த பூசந்தியில் இருக்கிறதோ, அந்த பூசந்தி ஒரு இடத்தில் பத்து மைல் அகலத்துக்குமேல் இல்லை ; ரஷ்யர்கள் திறமையாகப் போர் புரிந்து கெர்ச்சைப் பாதுகாக்க முடியும். நவராசிஸ்கில் கப்பல் படைக்கு வேண்டிய இடமிருக்கிறது. இருந்தாலும் அது ஒரு வர்த்தகத் துறைமுகமாதலால், செபாஸ்டபோலில் உள்ளதுபோல் கப்பல் மராமத்து முதலியன செய்ய சாலை கிடையாது.

க்ரைமியாவைப் பாதுகாப்பதற்கு கருங்கடலில் 23,000 டன் எடையுள்ள "பாரிஸ் கம்மியூன்" என்னும் ரஷ்யச் சண்டைக்கப்பல் இருக்கிறது. இதில் பன்னிரண்டு அங்குல பீரங்கிகள் 12 இருக்கின்றன.

இதைத் தவிர 7 அடி 1 அங்குல துப்பாக்கிகள் கொண்ட இரண்டு யுத்தக்கப்பல்களும், 5 அடி 1 அங்குல துப்பாக்கிகள் கொண்ட இரண்டு யுத்தக் கப்பல்களும், இருக்கின்றன. புதிய நாசகாரிக் கப்பல்கள் சுமார் 20 இருக்கின்றன. இதைத்தவிர 750 டன் எடையுள்ள இரண்டு டார்ப்பிடோ படகுகளும், 50 நீர் மூழ்கிகளும், 50 மோட்டார் டார்ப்பிடோ படகுகளும் இருக்கின்றன.

## பழைய முறைகள்

ஜெர்மானியர் தங்கள் புதிய யுத்த முறைகளை விட்டு விட்டு, பழைய கால யுத்த முறைகளை இப்போது கையாள ஆரம்பித்துவிட்டார்கள் என்று ரஷ்யர்கள் அடிக்கடி கூறுகிறார்கள். ஜெர்மானியர் இப்பொழுது வழக்கம்போல் மோட்டார்களில் காலாட் படைகள் பின் தொடர, முன்னால் பெரிய யந்திரப்படை கொண்டு தாக்குவதில்லையாம். அதற்குப் பதிலாக, பழைய கால யுத்த முறையின்படி, இருநூறு கஜத்துக்கு அப்பால் காலாட் படைகள் நடந்துவர, முன்னால் சிறுபான்மையான டாங்கிகளைக்கொண்டு தாக்குகிறார்களாம்.

இந்த முறைகளை ஜெர்மானியர்கள் எங்கெங்கு உபயோகிக்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்கள் எதிரிப் படையை உடைத்துக்கொண்டு உள்ளே போக விரும்பவில்லை. அதற்குப் பதில் படிப்படியாக எதிரியை பின்வாங்கச் செய்யப் பார்க்கிறார்கள் என்று தெரிகிறது. இதல்லாமல், தங்கள் டாங்கிகள் வெகுதூரம் முன்னேறிவிட்டால் பின்னால் வரும் பீரங்கிப் படையால் அவற்றுக்கு ஒரு உதவியும் புரிய முடியாதென்றும் அவர்கள் பயப்படுகிறார்கள். இந்தப் பழைய வழிகளை ரஷ்யப்போர் அரங்கம் முழுவதும் ஜெர்மானியர் கையாள ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் ரஷ்ய பாதுகாப்பின் தளராத உறுதியும், பலமும், எப்படிப்பட்டவை என்பது நன்றாக விளங்குகிறது.

ஜெர்மன் யந்திரப் படைகளின் நஷ்டங்கள் ஈடு செய்யப்படவில்லை. அதனால்தான் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது.

## ஜப்பானின் நோக்கம்

ஜெர்மனி ஒரு பக்கம் தாக்கிக்கொண்டிருக்கும் போது, ரஷ்யாவை மற்றொரு பக்கம் ஜப்பான் தாக்க வேண்டுமென்று ஜெர்மனி தூண்டிக்கொண்டிருக்கிறது. வடக்கே சைபீரியாமீது பாயும்படி ஜெர்மனி ஜப்பானை இப்போது மிகவும் நெருக்கிக்கொண்டு வருகிறது.

ரஷ்யாவோடும் அமெரிக்காவோடும் ஜப்பான் போர் தொடுக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் பலனாக ஜப்பானியக் கடற்படையும் அமெரிக்கக் கடற்படையும் சண்டையிட்டுக் கொண்டு, அதனுடன் பிரிட்டிஷ் கடற்படைக்கும் கீழ்க்கோடிக் கடலில் வேலை ஏற்பட்டுவிட்டால், ஜெர்மனிக்குப் பெரிதும் அனுகூலம் ஏற்படும். ஏனென்றால் பிரிட்டிஷ் கடற்படைப் பலத்தையும் அதன் நேசநாடுகளின் கடற்படைப் பலத்தையும் ஒடுக்கவேண்டு மென்பது ஜெர்மனியின் நோக்கம். ஜப்பான் பின்னும் தெற்கே பாய்வதன் பலனாக பிரிட்டனோடும் அமெரிக்காவோடும் அது போர்புரிய நேர்ந்தால் ஜெர்மனிக்கு மிகவும் சௌகரியம்.

ஆனால் இப்போதுள்ள நிலைமையைப் பார்த்தால் ஜப்பான், ஜெர்மனியின் சௌகரியத்தைவிட தன்னுடைய நன்மையைத் தான் கவனிக்கும் என்று தோன்றுகிறது. அடுத்தாற்போல் அது பாயப்போவது வடக்கிலோ தெற்கிலோ இலை. இந்தோ-சீனாவில் கிடைத்துள்ள பலமான தளங்களிலிருந்து சீனா மீதே பாயப்போகிறது. பர்மா ரோட்டுக்கு ஜப்பானால் ஏற்படக்கூடிய ஆபத்து எவ்வளவு பிரமாதமானதென்பதை பிரிட்டனும், அமெரிக்காவும், சீனாவும் உணர்ந்திருக்கின்றன.

சீனாவை வெல்வதற்குச் சாதகமாயுள்ள அனுகூலங்களை அமெரிக்காவிடமிருந்து பெறவேண்டுமென்பதுதான் ஜப்பானின் நோக்கம். இந்த நோக்கம் நிறைவேறுவது மிகவும் சந்தேகம்.

## ஜெர்மனிக்குதவும் சிறிய நாடுகள்.

ருமேனியா, ஹங்கேரி, பின்லாந்து நாடுகளின் பட்டாளங்கள் ஜெர்மனியின் பக்கம் நின்று ரஷ்யாவுக்கு எதிராகப் போர் புரிகின்றன. அவைகள் முதலில் கோரிய பிரதேசத்துக்கு அப்பால் வெகு தூரம் போய்விட்டன. இந்த அதிக்கிரமம் நிற்கப் போகிறதா என்பதை அவைகள் தெளிவாய் அறிவிக்கவேயில்லை. ஆகவே இம் மூன்று நாடுகளின் மீதும் முன்பு எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்தி அவைகள்மீது பிரிட்டன் போர் தொடுக்க வேண்டுமென்று ரஷ்யா கேட்டிருக்கிறது.

இவை மூன்றும் சேர்ந்து 30 பிரிவுக்கு மேலேயே போர்க்களத்துக்கு அனுப்பி யிருக்கின்றன. ஆகவே ஜெர்மானியர்கள் தங்கள் சொந்தச் சைனியத்தில் குறைந்தது 30 பிரிவை எப்போதுமே நேரடியான ரஷ்யத் தாக்குதலுக்குள்ளாகாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. உதாரணமாக, பெரும்பாலும் ருமேனியர்கள் தான் பலவாரங்களாக ஒடிஸ்ஸாவைப் பாதுகாத்தார்கள். இதனால் ஜெர்மானியர்கள் தங்கள் பிரிவுகளில் இன்னும் பலவற்றை டிநப்பருக்கு அப்பால் உபயோகிக்க முடிந்தது. சில சமயங்களில் ருமேனியர்களும், முக்கியமாய் பின்லாந்தாரும், கடுமையான போரிலும் பெரும்பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். வடக்கிலிருந்து லெனின்கிராட்மீது நடத்திய தாக்குதலைப் பெரும்பாலும் பின்லாந்தாரேதான் நடத்தினார்கள். உண்மையில் அவர்களுடைய பிரிவுகள் துணை நிற்காமலிருந்தால் ஜெர்மானியர் இவ்வளவு முன்னேறியிருக்க முடியாது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் மேலும் மேலும் ஆள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலா இத்தகைய உதவிப் படைகளைச் சும்மாவிடுவார்கள்? இந்தக் காரணத்தினால்தான் ரஷ்யர்கள் மேற்சொன்னபடி ஜெர்மனியின் உதவி நாடுகளின்மேல் போர் தொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

எது எப்படியிருந்தாலும், பிரிட்டன் ஏற்கெனவே இம் மூன்று நாடுகளையும் தன்னோடு போர் புரியும் நாடுகளாகப் பாவித்துத் தான் நடத்தி வருகிறது. பின்னிஷ் கப்பல்களை பிரிட்டன் பிடித்துக்கொண்டது. இந்த மூன்று நாடுகளில் எதற்கேனும் போகும் பொருள்கள் "எதிரிகளுக்குப் போவதாகக்" கருதப்படுமென்று பிரிட்டன அறிவித்திருக்கிறது. பிரிட்டிஷ் வியாபாரி யாரும் பின்லந்து கப்பல்களோடு எவ்வித லேவாதேவியும் வைத்துக்கொள்ளக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் மாதத்தில், பின்லாந்தார் ரஷ்யருக்கே சொந்தமான பிரதேசத்தின்மீது படையெடுத்துக்கொண்டே போனால், பிரிட்டன் பின்லந்தை பகிரங்கமாக விரோதியாய்க் கருதி நடக்க வேண்டியிருக்குமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் எச்சரிக்கை செய்திருக்கிறது. ருமேனியாவும் ஹங்கேரியும் ரஷ்யத் தாக்குதலில் ஜெர்மனியின் பக்கம் சேர்வதற்குப் பல வாரங்களுக்கு முன்னே, பெர்லினுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவை என்னும் காரணத்தினால் இவ்விரண்டினோடும் இருந்த சம்பந்தங்களையெல்லாம் அறுத்துக்கொண்டாய்விட்டது.

## ஜெர்மானியர்களின் கொடுமை.

பிடிபட்ட ரஷ்யப் பிரதேசங்களை நிர்வகிப்பதில் ஏற்படும் பெருத்த கஷ்டங்களைச் சமாளிப்பதற்காக ஜெர்மானியர் அங்கெல்லாம் மிருகத்தனமான முறைகளைக் கையாளுவதாகத் தெரிகிறது என்று மாஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகை நிருபர் எழுதுகிறார். விவரங்கள் அதிகமாகக் கிடைக்கவில்லை. ஆயினும் ஒரே பயங்கர ஆட்சி அங்குத் தலைவிரித்தாடுகிறதென்பதில் சந்தேகமில்லை.

ரஷ்யர்களின் எதிர்ப்பு அதிகரிக்க அதிகரிக்கத்தான் இந்தக் கொடுமையும் அதிகரித்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆகவே ரஷ்ய மக்களிடம் ஜெர்மானியர்கள் கொஞ்சங்கூட இரக்கங் காட்டமாட்டார்களென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. ஆனால் லஞ்சம் கொடுத்தும் பயமுறுத்தியும் வேறு பல உபாயங்களைக் கொண்டும் ரஷ்யர்களிடையுள்ள ஐக்கியத்தைக் குலைக்க அவர்கள் முயலுவார்கள்.

இப்படி மனக்கசப்பும் பிரிவினையும் ஏற்படுத்துவதற்காகத்தான் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து கட்டாயப்படுத்தி மக்களை ரஷ்யாவில் போய்க் குடியேறச் செய்கிறார்கள் என்று தெரிகிறது. ஏற்கெனவே போலிஷ் நிலச் சுவான்தார்களைக் கிழக்கே அனுப்ப முயற்சி நடந்தது. இப்போது மிச்சமுள்ள யூதர்களையும் தொலைத்து வருகிறார்கள். திடீரென்று அவர்களைக் கிளப்பி அனுப்புகிறார்கள். அனுப்புவது கிழக்கேயாகத்தான் இருக்குமென்று தோன்றுகிறது. செக்கோஸ்லவேகியாவிலும் மக்களில் சில பிரிவினர் விஷயத்தில் இந்த மாதிரியான முறைகளே கையாளப்படலாம்.

## 5. பால்கன்ஸ், துருக்கி முதலியன.

பால்கன் தீபகர்பத்தில் இருக்கும் கிரீஸ் தேசம் ஜெர்மன் ஆட்சியின் கீழ் கஷ்டப்படும் நிலைமை ஒரு துருக்கிக் கப்பலில் அந்த தேசத்துக்குச் சென்றவர் விளக்கிக் காட்டியிருக்கிறார். சாதாரணமாக கிரீஸ் நிலைமையைப்பற்றி வெளியில் தெரிந்திருப்பதை விட நூறு மடங்கு அதிக கேவலமான நிலைமையில் அந்த நாடு இருக்கிறது என்று அவர் கூறுகிறார். கிரீஸ் பட்டணத்தின் வழியாக நடந்து சென்றால், அங்கு காணப்படும் காட்சி கொடூரமானதாயிருக்கிறதென்றும் நடமாடும் மக்கள் எலும்புக் கூடுகளைப் போல் இருக்கிறார்களென்றும் அவர்தெரிவிக்கிறார்.

துருக்கி தேசத்தார் ஒருவர் சமீபத்தில் கிரீசில் இருந்து திரும்பிவந்திருக்கிறார். கிரீசின் தலை நகரமாகிய ஆதன்சில் தினந்தோறும் குறைந்தபட்சம் 20 பேர் பட்டினியால் இறந்துபோகிறார்களென்று அவர் கூறுகிறார்.

துருக்கியில் ஒரு அபிப்பிராயம் பலமாக இருக்கிறது. பிரிட்டிஷ் தீவுகளைத் தாக்குவதற்குப் பதிலாக, ஜெர்மனியர்கள் கிழக்கு நோக்கிச் செல்லவேண்டுமென்ற நோக்கத்துடன் இருக்கிறார்கள் என்று அங்கு கூறப்படுகிறது. காகசஸ் மூலமாக இந்தியாவை நோக்கிச் செல்லவேண்டுமென்றும், அதே சமயத்தில் வட ஆப்பிரிக்காவிலிருந்து எகிப்தைத் தாக்கவேண்டுமென்றும், ஜெர்மானியர்கள் யோசனை செய்திருப்பதாகத் தெரிகிறது.

## 6. கப்பல் நிலைமை.

இரண்டு பெரிய எதிரி 'கான்வாய்' துணைக் கப்பல் கூட்டத்தை, பிரிட்டிஷ் கப்பற்படை மத்தியதரைக் கடலில் நாசமாக்கிவிட்டது. 9 எதிரிக் கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. பத்தாவது கப்பல் நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்துபோய்விட்டது. ஒரு இத்தாலிய நாசகாரிக் கப்பல் முழுகடிக்கப்பட்டது. மற்றொரு கப்பல் அதிகமாகப் பழுதாக்கப்பட்டது.

சென்ற மூன்று மாதங்களில் 86 எதிரிக் கப்பல்கள் (சுமார் $3\frac{1}{2}$ லட்சம் டன் மொத்த எடையுள்ளவை) மத்தியதரைக் கடலில் முழுகடிக்கப்பட்டன; 61 கப்பல்கள் (சுமார் $2\frac{3}{4}$ லட்சம் டன் மொத்த எடையுள்ளவை) சேதமாக்கப்பட்டன.

## 7. தூரக் கிழக்கு அரங்கம்

ஜப்பானுக்கு மிஸ்டர் சர்ச்சில் ஒரு கடுமையான எச்சரிக்கை செய்திருக்கிறார். அமெரிக்காவுடன் ஜப்பான் போர்தொடுத்த ஒரு மணி நேரத்துக்குள், பிரிட்டன் ஜப்பானுடன் போர்தொடுக்கும் என்று அவர் கூறியிருக்கிறார். ஜப்பான் இப்போது பர்மா ரோட்டைத் தாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இருப்பதாகத் தெரிகிறது. பர்மா ரோட்டு வழியாக அமெரிக்காவும், பிரிட்டனும் சீனாவுக்கு யுத்த சாமான்களும், இதர 'சப்ளை'களும் அனுப்பிக்கொண்டு வருகின்றன. இந்த ரோட்டைத் துண்டித்து விட்டால் சீனாவுக்கு வரும் உதவி நின்றுவிடும்; அதனால் சீன யுத்தமும் நின்றுவிடும் என்று ஜப்பான் நினைக்கிறது.

## 8. விஷியும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரான்சும்

விஷி அரசாங்கத்தின் கொள்கை பிடிக்காமல், மூன்று பிரெஞ்சு ஸ்தானீக உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டு, சுதந்தர பிரெஞ்சுத் துருப்புகளோடு சேர்ந்துகொண்டார்கள்.

பிரான்சு முழுவதையும் கைப்பற்றி, ஒரே ஜெர்மன் ஆட்சியின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று ஜெர்மன் ராணுவத் தலைவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இப்போதிருக்கும் நிலைமையை மாற்றவேண்டுமென்று ஹிட்லர் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

ஜெர்மானியர்கள் ரோட்டுகளில் செல்லும் பிரெஞ்சு மக்களைச் சோதனைபோடுகிறார்கள்; இரகசியமாக ஆயுதம் ஏதாவது வைத்திருக்கிறார்களா என்று பார்க்கிறார்கள். இதனால் பிரெஞ்சு மக்களிடையே அமைதியின்மையும், அதிருப்தியும் அதிகரித்திருக்கின்றன. பிரெஞ்சு பாதிரிகள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அடக்குமுறை வேகம் அதிகமாயிருக்கும் இந்தச் சமயத்தில் பாரிசுக்கு வெளியே வசிக்கும் பிரெஞ்சு மக்கள் அந்த நகரத்துக்குள் நுழைவது என்பது அசாத்தியமான காரியம் என்று சொல்லலாம். எல்லை ஜில்லாக்களில் வசிக்கும் ஒரு பிரஞ்சுக்காரர் தன் தாயாரின் மரணச் சடங்குகளைச் செய்வதற்காக பாரிஸில் நான்கு நாட்கள் இருக்க அனுமதி பெற்றார். ஆனால் ஆபர்வில்லியர்ஸைத் தாண்டி ரயில் வண்டி போகவில்லையாம். இப்பொழுது நகரத்தில் உள்ள பெரிய ஸ்டேஷன்களுக்கு வண்டி போவதில்லை என்று கூறுகிறார்கள். பாரிசுக்குப் புதிய ஜெர்மன் துருப்புகள் வந்திருக்கின்றன. பிரான்ஸில் இப்பொழுது 8 லட்சம் ஜெர்மன் துருப்புகள் இருக்கின்றன. புதிய துருப்புகள் மிகவும் கடுமையாயிருக்கின்றன. ஒரு சின்ன சாக்கு அகப்பட்டால் போதும், ஜனங்களைக் கைது செய்து சிறைக்கு அனுப்பிவிடுகின்றனர்.

## 9. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகள்

### ருமேனியா கொடுத்த பலி

ஜெர்மனியின் உதவிக்காக ரஷ்ய யுத்தத்தில் ஈடுபட்ட ருமேனியா ஏராளமான துருப்புகளை இழந்திருக்கிறது. பெஸ்ஸரேபியாவிலிருந்து டினீஸ்டர் நதியைக் கடந்து ரஷ்யாவுக்குள் பிரவேசித்த 3 லட்சம் ருமேனிய சிப்பாய்களில், சுமார் லட்சத்து இருபத்திரண்டாயிரம் பேர் சண்டையில் கொல்லப்பட்டார்கள். ஜெர்மனியின் உத்தரவுகளை நிறைவேற்றும் பொருட்டு அழிந்து போய்க்கிடந்த ஒடிஸ்ஸாவைக் கைப்பற்றுவதற்காக, ருமேனியா இவ்வளவு பேரைப் பலி கொடுத்திருக்கிறது.

காயமடைந்த ருமேனியர்களை நீளமான ரயில் வண்டிகளில் ரஷ்யப் போர் முனையிலிருந்து கொண்டு போய்க்கொண்டே இருக்கிறார்கள். இப்படி ரயிலிலிருந்து வந்திறங்குபவர்களை ஓயாது இறக்கிச் சென்றுகொண்டேயிருக்கும் 'ஆம்புலன்ஸ்' என்ற முதல் வைத்திய உதவி வண்டிகளை மக்கள் பார்க்கக் கூடாதென்பதற்காக வாரத்தில் மூன்று நாள், இரவு 11-மணிக்கு மேல் பொழுது விடியும் வரை, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. இதை மீறுபவர்களுக்கு மரண தண்டனையென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன ரயில் வண்டிகள் ஊரடங்கும் நேரம் வரும்வரை ருமேனியாவின் தலைநகருக்கு வெளியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

இந்த ஊரடங்கு உத்தரவின் விசேஷமென்னவென்று தெரிந்துவிட்ட பிறகு, நாடு முழுவதும் அழிவுவேலை அதிகப்பட்டிருக்கிறது. ஏழு ரயில் வண்டிகள் கீழே கவிழ்க்கப்பட்டன. பெட்ரோல் உள்ள பிரதேசத்தில் நெருப்பு வைக்கப்பட்டது. எண்ணெய் நிறைந்த ஐந்து எண்ணெய்க் கப்பல்கள் டான்யூப் நதியில் அமிழ்த்தப்பட்டன.

ஹிட்லருக்கு உதவியான ருமேனிய இரும்புப் பட்டாளம் மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. ஜெர்மன் ஆட்சியை எதிர்க்கக்கூடிய ருமேனியர்களையெல்லாம் அழிக்கும் வேலையில் அவர்கள் மீண்டும் இறங்கியிருக்கிறார்கள். இதைச்சேர்ந்தவர்கள் நேரே ஹிட்லருடைய தலைமை ஸ்தானமாகிய பெர்லினிலிருந்து சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்து வருகிறார்கள்.

### மக்களின் அதிருப்தி

ரஷ்யாவின்மீது போரைத் தொடர்ந்து நடத்துவதைப்பற்றி ருமேனிய மக்களுக்கு நாளுக்குநாள் அதிருப்தி அதிகரித்து வருகிறது. புதிய புதிய ருமேனியப் படைகளைப் போர் முனைக்கு ஓயாமல் அனுப்பி வருவதால் இந்த மனக்கசப்பு மிகவும் அதிகப்பட்டிருக்கிறது. சுமார் 5 லட்சம் ருமேனியர்கள் இப்போது ரஷ்யாவில் போர் புரிந்து வருகிறார்களாம். இன்னும், பின்லாந்தார், ஹங்கேரியர், இத்தாலியர் இவர்களையும் சேர்த்துக்கொண்டால், ரஷ்யச் சைன்யத்தை எதிர்த்துப் போராடிவரும் ஜெர்மானியரல்லாதவர்களின் எண்ணிக்கை $7\frac{1}{2}$ லட்சம் ஆகிறது.

ருமேனிய ஆஸ்பத்திரிகளும் தனிப்பட்டவர்களின் வீடுகளும் காயமுண்ட ருமேனியர்களால் நிறைந்திருக்கின்றன. ஜெர்மானியர் காயமுண்டவர்களை ஹங்கேரிக்கு அனுப்பி வருகிறார்கள். ஹங்கேரிய ஆஸ்பத்திரிகளில் 2 லட்சம் படுக்கைகள் இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

### கிரேக்க மக்களின் எதிர்ப்பு

கிரீஸில் இருக்கும் பல்கேரிய அதிகாரிகள் ஜெர்மன் முறையைப் பின்பற்றுகிறார்கள். கொல்லுவதற்கென்று அவர்கள் பிணையாள்களை தேடிப் பிடிக்கிறார்கள். கொல்லப்படும் ஒவ்வொரு அதிகாரி அல்லது சிப்பாய்க்குப் பதில் ஐம்பது அல்லது அதற்கு மேற்பட்ட பிணையாள்கள் கொல்லப்படுகிறார்கள். சென்ற ஐந்து வாரங்களுக்குள் ஸ்திரீகள், சிறுவர்கள், விருத்தாப்பியர்கள் உள்பட 300 நிரபராதிகள் தூக்கிலிடப்பட்டார்கள்.

கிரீஸிலிருந்து வந்திருக்கும் மக்கள் கூறுவதிலிருந்து கிரேக்க திரேஸ், மாஸிடோனியா இவற்றில் உள்ள பல்கேரிய சர்க்காரும், அதிகாரிகளும் ஹிட்லரின் முறைகளைப் பின்பற்றுகிறார்கள் என்று தெரிகிறது. இவர்களுக்காக எல்லாரும் வேலை செய்ய வேண்டும் என்றும், கால்நடைகள் தானியங்கள், உழவு கருவிகள்—இவற்றை எல்லாம் இவர்களிடம் கொடுத்துவிடவேண்டும் என்றும் உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. நாடெங்கும் புதிய புதிய சிறைக் கூடங்கள் அமைத்திருக்கிறார்கள். ஆனால் இந்த பயமுறுத்தல்களையும், சித்திரவதைகளையும் கண்டு கிரேக்கர்கள் பயப்படவில்லை. யுவர்களும், திடகாத்திரர்களும், மலைகளுக்கு ஓடிப்போய் அங்கு ஆயுதம் தாங்கிய படைகளாக அமைந்திருக்கிறார்கள். இந்த படைகள் பல்கேரிய அதிகாரிகளையும் சிப்பாய்களையும் தாக்குகின்றன. தினந்தோறும் சண்டைகள் நடக்கின்றன.

## 10 நடுநிலைமை நாடுகள்

யுத்தத்தில் நடுநிலைமை வகித்திருக்கும் சிறு நாடுகளின் கொள்கையில் சென்ற வாரம் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஸ்பெயின், ஸ்வீடன், ஸ்காண்டினேவியா முதலிய நாடுகள் இதற்குமுன் எப்படியிருந்தனவோ, அதேமாதிரியான நிலையில் தான் இருந்துவருகின்றன.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றன்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் ஆபீஸர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.